**SRI SANDEEPANI GURUKULA TRUST,**
4/11, Nethaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 600 083, INDIA.

श्रीहरिः

श्रीरामः शरणं मम

# ஏகாகீ ருக்வேத கண்டஸ்த$^{2}$ க$^{4}$னபாராயண பத்திரிகை



। साक्षान् मूलप्रमाणाय विष्णोरमिततेजसे ।
। आद्याय सर्ववेदानां ऋग्वेदाय नमोनमः ।

Date: **10.06.24 – 21.07.24 (42 Days)**
Venue: **Sri Shankara Gurukulam, Abhiramapuram, Chennai 600018**







श्री चन्द्रशेखरेन्द्र जयेन्द्र शंकरेति आकृतिभृत् त्रयीवयः ।
कामकोटि पदभूषणः गुरुः भाष्यकृत् कुवलयं पुनातु सः ।

நமோநம: ஸ்ரீ ராமஜயம்

ஸ்வஸ்திஸ்ரீ மங்களகரமான குரோதி வருஷம் வைகாசி மாதம் 28ம் தேதி முதல் ஆரம்பித்து (10-06-2024) ஆடி மாதம் 5ம் தேதி வரை (21-07-2024) ஏகாகீ ருக்வேத கண்டஸ்த[2] க[4]னபாராயணம் நடைபெறவுள்ளது.

। धर्मो विश्वस्य जगतः प्रतिष्ठा|
என்று வேதோக்தமான தர்மமே லோகத்திற்கு ஆதாரம் என்றும்.

नान्यतो ज्ञायते  धर्मः वेदादेवैष निर्बभौ ।

तस्मात् सर्वप्रयत्नेन धर्मार्थं वेदमाश्रयेत् ।

நமது ஸனாதன தர்மஶாஸ்த்ர நூல்களில், ஜகத்திற்கு ஆதாரமான தர்மமானது, வேதத்திலிருந்தே உண்டானது என்பதால், தர்ம ஸம்ரக்ஷணத்திற்காக, பெரு முயற்சியுடன், வேதத்தை ஆஶ்ரயிக்க வேண்டியுள்ளது என்றும், அவ்வாறே நமது தாய் மொழியான தமிழிலும்

**பாடல் #51: பாயிரம் – 2 வேதச் சிறப்பு**
**வேதத்தை விட்ட அறம்இல்லை - வேதத்தின்**
**ஓதத் தகும்அறம் எல்லாம் உள**
**தர்க்க வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற**
**வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே.**
**-திருமூலர் திருமந்திரம்**

விளக்கம்: வேதங்களை விட பகவான் வழங்கிய அறம் வேறொன்றும் இல்லை. ஓதுவதற்கும் அதன்படி நடப்பதற்கும் ஏற்ற அறங்கள் எல்லாம், வேதத்தில் உள்ளது. நமது முன்னோரான மஹரிஷிகள் அனைவரும், பகவான் வழங்கிய வேதத்தை, ஏன் எதற்கு, என்கிற வீண் விவாதங்கள் செய்யாமல், அனைவரும், பகவான் வழங்கிய வேதத்தை ஓதியே, முக்தியைப் பெற்றார்கள். அவ்வழியே

यथाग्निर्वायुना धूतो हविषा चैव दीप्यते ।

एवं जप्यपरो नित्यं मन्त्रयुक्तः सदाद्विजः" ।

அக்னியானது எப்படி காற்றினால் வீசப்பட்டு நெய் முதலிய ஹவிஸ்ஸினால் ஜ்வலிக்கின்றதோ அவ்விதமே, மந்த்ரோபாஸன ப்ராம்ஹணன், ஜபயக்ஞாதிகளால் விசேஷமாய் ப்ரகாசிக்கிறான்... என்பதால்

**"शब्दे ब्रह्मणि निष्णातः परं ब्रह्माधि गच्छति**

அந்த பரவஸ்துவை அடைய, வேதமே கதி என்பதால், பகவத் பஜனானுரூபமாகிய, வேதபாராயண வைபவம், நமது சென்னை **ஶ்ரீசாந்தீபனி குருகுலம் டரஸ்ட், சென்னை** மூலமாக காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் **ஜகத்குரு ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்** அனுக்ரஹத்துடன் **மஹாரண்யம் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ முரளீதர ஸ்வாமிகள்** அனுக்ரஹத்துடனும் **"வக்தா-ஶ்ரோதா"** என்ற முறையில் ஏகாகீ கண்டஸ்த ருக்வேத கனபாராயணம் மற்றும்

**स्वाध्याय प्रवचनाभ्यां न प्रमदितव्यम्**

வேத பாராயணத்துடன் ப்ரவசனத்தையும் செய்தல் வேண்டும் என்று நமது வேத்தில் உபதேசிக்கப்பட்டுள்ளதால் மற்றும்

**ब्राह्मणेष्वपि वेदज्ञो ह्यर्थज्ञोऽभ्यधिकस्ततः ।**
**अर्थज्ञात्संशयच्छेत्ता ततः श्रेयान् स्वकर्मकृत् ॥**

**-श्रीमद्भागवतम् 3:29:32**

அந்தணர்களிலும் வேதமறிந்தவரும், அவர்களில் அந்த வேதத்தின் பொருளறிந்தவரும் சிறந்தவர்.

அவ்வாறு பொருளுணர்ந்தவர்களிலும் அப்பொருளில் விளையும் ஐயங்களைத் தீர்க்கும் திறனுடையவரும் தமது நெறிமுறைகளைச் செவ்வனே ஆற்றுபவர் சிறந்தவர்.

**வைகாசி 28 (ஜுன் 10) ஆரம்பித்து, ஆடி 5 (ஜுலை 21),** குரு பூர்ணிமா வரை, 42 நாட்கள்,

அபிராமபுரம் **"ஶ்ரீசங்கர குருகுலத்தில்",** பகவத் ப்ரீதிகரமாக குருவருள் கொண்டு நடக்க இருக்கிறது.

வேதபாராயணத்தை மற்றும் விசேஷ வேத மந்திரார்த்த உபன்யாசங்களையும், அனைவரும் ஶ்ரவணம் செய்து குருவருள் மற்றும் பகவத் க்ருபைக்கு பாத்திரராகும் படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ராம் ராம்

**वेदाक्षराणि यावन्ति पठितानि द्विजादिभिः |**
**तावन्ति हरि नामानि कीर्तितानि न संशयः ||**

பாராயணம் செய்யும் முறை...
தனி ஒருவராக 155039 பதங்களைக் கொண்டு கனபாடமாக சொல்வது - (FORMULA. 1221123321123. •.2332234432234.)

**கனபாராயண**

**வக்தா -** **ப்ரம்மஸ்ரீ L. ராகவேந்திர கனபாடிகள்**



ப்ரம்மஸ்ரீ ஆம்னாய வாசஸ்பதி G. ஸூர்யநாராயண கனபாடிகளிடம் இவர் ருக் வேதம் ஸலக்ஷண கனாந்தம் அத்யயனம் செய்து ஸம்பூர்ண கனாந்தம் இவர் ஒருவராக சொல்லபோகிறார்.

**ஶ்ரோதாக்கள்:**
1. ப்ரம்மஸ்ரீ. சிவசுப்பிரமணிய கனபாடிகள்
2. ப்ரம்மஸ்ரீ பாஸ்கர கனபாடிகள்
3. ப்ரம்மஸ்ரீ கண்ணன் சாஸ்திரிகள்
4. ப்ரம்மஸ்ரீ ஸ்ரீதர கனபாடிகள்

**அத்யாபகர்கள்:**
1. ப்ரம்மஸ்ரீ நாகராஜ சாஸ்திரிகள்
2. ப்ரம்மஸ்ரீ B.V.ஸூர்யநாராயண கனபாடிகள்
3. ப்ரம்மஸ்ரீ கண்ணன் சாஸ்திரிகள்
4. ஆம்னாய வாசஸ்பதி ப்ரம்மஸ்ரீ G. ஸூர்யநாராயண கனபாடிகள், HYD

**உபஶ்ரோதாக்கள்:** ருக்வேத கனபாடிகள்

**உபன்யாசகர்கள்:**
1. மஹாமஹோபாத்யாய முல்லைவாசல் ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.
2. மஹாமஹோபாத்யாய ப்ரம்மஸ்ரீ மணித்ராவிட் சாஸ்திரிகள்.

மற்றும் வேத பாஷ்ய சாஸ்த்ர வித்வான்கள்.

**நிகழ்ச்சி நிரல்**

| | |
|---|---|
| **பாராயணம்** | **காலை 7.30 முதல் 11.30 வரை**<br>**மதியம் 3.30 முதல் 5.30 வரை** |
| **உபன்யாசம்** | **தினமும் சாயங்காலம் 6.30 முதல் 8.00 வரை** |
| **தேதி** | **10.06.24- 21.07.24 (42 Days)** |
| **இடம்** | **Sri Sankara Gurukulam (ஸ்ரீ சங்கர குருகுலம்),**<br>8/20, Sir C P Ramaswamy Street, Trust Pakkam<br>Abhiramapuram, Chennai 600018 |

பூர்த்தி தினத்தன்று வக்தா (பாராயணம் செய்பவர்) அவர்களை Chariotல் அமர்த்தி ஊர்வலம் நடைபெறும்

சுபம் ராம் ராம்